St. Joseph's Journal of Humanities and Science (Volume 3 Issue 1 January 2016) 6-16

St. Joseph's Journal of Humanities and Science

ISSN: 2347 - 5331

http://sjctnc.edu.in/6107-2/




# முத்தொள்ளாயிரத்தில் உளவியல்

- **முனைவர். நா.சிவாஜி கபிலன் ***

தமிழில் பண்டைய இலக்கியமான முத்தொள்ளாயிரம் ஒரு புறத்திரட்டு நூல் ஆகும். சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் சிறப்புகளைக் கூறும் இந்நூலில் அகமரபுக் கூறுகளுள் உளவியல் இடம் பெற்றுள்ள தன்மைகளை இக்கட்டுரை ஆய்கிறது.

உளவு + இயல் என்ற பொருள் தருவதால் உளவியல் என்பது சரியான பொருள் ஆகும். இதனை மனவியல் என்றும் கூறுவர்.

உளவியல் எனும் சொல்லானது சைக்காலஜி (Psychology) என ஆங்கில மொழியில் அழைக்கப்படுகிறது. முதன்முதலில் உளவியலை ஆன்மாவைப் பற்றிய அறிவியல் என்று வரையறுத்தனர். **சைக்காலஜி** எனும் சொல் **சைக்கி லோஜஸ்** எனும் கிரேக்கச் சொற்களை மூலமாகக் கொண்டது. **சைக்கி (Psychi)** என்றால் **ஆன்மா** அல்லது **ஆவி** என்று பொருள். **லோஜஸ்** (Logos) என்றால் **அறிவியல்** அல்லது **அறிவுத்துறை** அல்லது ஒருவனுடைய செயல் என்பது பொருள். இவ்விரு கிரேக்கச் சொற்களையும் இணைத்து ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி உளவியலை, **மனித ஆன்மா அல்லது உள்ளத்தின் தன்மை, செயல், நிகழ்ச்சி பற்றிய ஓர் அறிவியல்** என்று உளவியலை வரையறுக்கிறது.

## மனநலம்

திருவள்ளுவர், கன்பூசியசுக்கு முன்பே மனநலம் குறித்து விவாதித்தவர். அவர்

**"மனநலம் மன் உயிர்க்கு ஆக்கம் இனநலம்**
**எல்லாப் புகழும் தரும்"** **(குறள் 457)** என மனநலம் குறித்துக் கூறுகிறார்.

## முத்தொள்ளாயிரத்தில் உளவியல்

முத்தொள்ளாயிரத்தில் உளவியல் கூறுகள் பல இடம்பெற்றுள்ளன். மன்னன் பாண்டியன் பண்பு நலம் வாய்ந்தவன். கூரியவேல், வண்டுகள் மொய்க்கும் மலர்மாலை, தாவும் குதிரை இவற்றைக் கொண்டே பாண்டிய மன்னன் பண்பின் இருப்பிடம் என்பதனை அறிய முடிகிறது . பாண்டியனது பண்பானது கருமையும், நறுமணமும் உள்ள குவளைமலர், புதுமணம் பொருந்திய குளத்தில் நாள்தோறும் நீரில் நிலைத்து தன் தண்டாகிய காலால் நின்று புரிந்த தவத்தின் பயன் எனும் பொருளமைந்த பாடல்,

* இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அ.வீரையா வாண்டையார் நினைவு திருநுட்பம் கல்லூரி(த), பூண்டி-613 503, தஞ்சாவூர்.
கைப்பேசி: 9443976060, மின்னஞ்சல்: thoorigaikabilan@gmail.com

**"கார்நறு நீலம் கடிக்கயத்து வைகலும்**
**நீர்நிலைநின்ற தவம்கொலோ கூர்முனைவேல்**
**வண்டிருக்க நக்கதார் வாமன் வழுதியால்**
**கொண்டிருக்கப் பெற்ற குணம்" (பாடல் 65) என்பதாகும்.**

ஒருவருக்குப் பெருமையும் பண்பும் அமைதல் அவர் சார்ந்திருக்கும் இடத்தையும் சேர்ந்திருப்போரையும் ஒட்டியதாகும். இப்பாடலில் வரும் குவளை மலருக்கு மணமும் குணமும் பாண்டியன் மாலையாக அணியப் பெற்றதால் அமைந்தவை என்பது இதன் உட்பொருளாகும்.

## காதலும், காமமும்

மனிதவாழ்வில் காதலும் காமமும் ஒன்றற்கொண்று தொடர்புடையதாகும். ஒன்று வெளிப்படும்போது மற்றொன்று வெளிப்படாது. இரண்டுமே வெவ்வேறு நேரங்களில் தனித்தியங்கும் இயல்புடையது என்றாலும், காதலின் வழியேதான் காமத்தை நுகரமுடியும். காமத்தில் காதல் இல்லை.

## காதல்

'எந்தப் பொருள் இன்பத்தைக் கொடுக்கிறதோ அதன்மீது மனிதன் வைத்திருக்கிற உறவே காதல்' என்பார் ஸ்பினோசா. கோபென்ஹா், 'மனிதமனம் தனக்குள் உண்டான இறுக்கத்தை விலக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகப் போராடுவது காதல்' என்பார்.

காமம் என்பது காதலல்ல. அது விருப்பம். காதல் வெளிப்படையான விசயத்தைப் பற்றியது. அன்பு கடலைப் போன்றது. காமம் ஒரு மழைத்துளியைப் போன்றது. அடங்காத காமவெறியோடு ஒருவன் வரம்பு மீறினால் அவனது உடல்நலம் கெடுகிறது. அதனால் அவன் குடும்பமும் பாதிக்கப்படுகிறது. மேலும். சீற்றத்தோடு எரிமலை துப்பும் நெருப்புக் குழம்பு வீடுகளை, உயிர்களை, மூழ்கடித்துக் கருக வைப்பது போலக் கட்டுக்கு அடங்காத காமம் அழிவை ஏற்படுத்துகிறது எனக் காமத்தின் தன்மையையும், அதுவே வெறியானால் ஏற்படும் விளைவையும் விளக்குவர் அறிஞர்.

## முத்தொள்ளாயிரத்தில் காதலும் காமமும்

காதலும், காமமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றது. காம உணர்வில் மாமை எனும் நிறம் மற்றுமோர் அழகிய நிறமாக உள்ளது. இதன் அடுத்த நிலையை வள்ளுவர் பசப்பு எனும் சொல்லால் பசலை எனும் பொருள் தருவார். இந்நோய்க்கு அடிப்படைக் காரணம் காம ஏக்கம் ஆகும்.

இதனை முத்தொள்ளாயிரத்தின் இரண்டாம் பாடல்,

**"வாழான் தேர்க் கோதையை மான்முதற் மேற்கண்டவர்**
**மாமையே அன்றோ இழப்பது மாமையின்**
**பன்னூறு கோடி பழுதோ என் மேனியில்**
**பொன்னூறியன்ன பசப்பு" (பாடல் 27) என்கிறது.**

சேரனைக் குதிரையுடன் தேரின் மீது கண்ட மகளிர் தம் அழகிய நிறத்தை இழப்பர். அது பசப்பு நிறம் எனவும், அது மாமையைவிடப் பலநூறுகோடி பழுதுடையதோ? என வினவுவதால் தலைவியின் உள்ளத்தில் ஏற்பட்ட காம நோயின் தன்மையினை அறியலாம்.

புலவர் காமத்தை,

**"குடத்து விளக்கேபோல் கொம்பன்னார் காமம்"**

என்கிறார் இதனை,

**"குடத்து விளக்கேபோல் கொம்பன்னார் காமம்**

**புறப்படா பூந்தார் வழுதி புறப்படின்**

**ஆபுகு மாலை அணிமலையில் தீயே போல்**

**நாடறி கௌவை தரும்"** **(பாடல் 83)** என்னும் பாடல் எடுத்துரைக்கும்.

இக்காதல் நோயானது,

**"நெஞ்சங் களங் கண்ட நோய்"** **(பாடல் 10)**

என வருணிக்கப்படுகிறது.

சோழன் குறித்தப் பாடலொன்றில்,

**"……………… நலம் தொலைத்து**

**பீரமேற்கொளல் உற்ற ………………..."** **(பாடல் 28)** என வரும் தொடரானது **'அழகு நீங்கிய பீர்க்கம் பூவின் நிறமான, பசலை நிறத்தை'** உணர்த்துகின்றன.

காதலில் ஒருவகைப் பிதற்றல் இருக்கும் . அந்நிலையில் பேசாதன எல்லாம் பேசுவனவாய் நினைத்து, துயர்மனத்தை ஆற்றுதற்கும் பேசுவதற்கும் தலைவியரது உள்ளம் விரும்பும் என்பதனை அறியலாம்.

சோழன் பகுதி அமைந்த செங்கால் மடநாராய் எனத் தொடங்கும் பாடலின் இறுதி அடிகள்

**"……………… காவிரிநீர் நாடற்கு**

**உரையாயோ யான் உற்ற நோய் "** **(பாடல் 38)**

எனத் தம் காதல் நோயைச் சோழனுக்குச் சொல்ல மாட்டோயோ? எனக் கூறுவதனைக் காணமுடிகிறது.

## அச்சம்

உளவியல் ஆய்வுகளில், அச்சம் அவசரகால மனவெழுச்சிகளில் ஒன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஜே.பி.வில்லியம் மெக்டுகல் போன்ற இயல்பூக்கக் கொள்கையினர் அச்சம் என்ற மனவெழுச்சி விரைந்தோடுதல் என்ற இயல்பூக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது எனக் கருதுகின்றனர். வாட்சன் அச்சம் ஓர் கற்கப்பட்ட துலங்கல் என்று கூறுகிறார். அச்சம் ஓர் வலி சார்ந்த துலங்களுக்குத் தரப்படும் துலங்கல் ஆகும்.

குழந்தையிடம் அச்சத்தை, எளிதாக ஏற்படுத்த முடியும். வாட்சன், அச்சத்தை ஏற்படுத்தக்கூடிய தூண்டல்கள் என்று நம்பப்படும் பாம்பு தீ போன்றவற்றிடம் இயல்பாகவே குழந்தைகளுக்கு அச்சம் இருப்பதில்லை என்று விளக்கியுள்ளார்.

பயங்கரம், திகில், பேரச்சம், கிலி, திடுக்கிடுதல், அஞ்சி நடுங்குதல் போன்ற பெயர்களனைத்தும் அச்ச மனவெழுச்சியுடன் தொடர்பு கொண்டுள்ளன. திகிலின் கோலம் தலையைத் திருப்புதல், கழுத்தை வளைத்தல், தோள்களைக் குலுக்குதல், சுருங்குதல், நடுங்குதல், வெடவெடத்தல், வியர்த்தல், வாந்தியெடுத்தல், கழிவுப் பொருட்களை வெளியேற்றுதலில் கட்டுப்பாடின்மை, சிறுநீர் கழித்தல், நாடித்துடிப்பு மிகுதல், சுவாசம் விரைவாதல் போன்றவை சில அச்சத்துலங்கல்கள் ஆகும்.

மிகை அச்சம் பல வகைப்படும். ஒவ்வொரு பொருளுக்குரிய அச்சத்தை, அந்ததந்தப் பெயரிட்டுக் குறிப்பிட்டுள்ளார்கள். கூட்டம், பள்ளம், பற்றியெல்லாம் அச்சம் உருவாகி மிகையச்சம் ஏற்படுகின்ற நிலை உண்டாகும்.

அச்சமானது, உதவி அல்லது கெடுதல் செய்கின்ற உணர்ச்சிவேகம் ஆகும். ஒரு கட்டிடம் நம்மேல் விழுவது போன்ற ஆபத்து வரும் போது அச்சம் கிளறிவிடப்படுகின்றது. முகம் வெளுத்துக் கண்கள் அகலமாய்த் திறந்து கொண்டு உடலுக்குள் ஏற்படும் மாற்றங்கள் அந்தக் கட்டிடத்தைவிட்டு ஓடுவதற்கு உணர்ச்சி வேகமானது துன்பத்திலிருந்து நம்மைக் காப்பாற்றவும் உதவுகிறது என்பதை மறுக்கமுடியாது.

## நலமார்ந்த அச்சம்

நலமார்ந்த அச்சம் என்பது கடவுளுக்கும் அதிகாரிகளுக்கும் அஞ்சுதல் ஆகும். இது தன் மதிப்பு உணர்வும் தனி ஒருவரின் உரிமைகளை அறிந்திருப்பதும் ஒன்றிற்கொன்று குறையாமல் பார்த்துக்கொள்வதுமாகும். அதிகாரிகளிடம் கொண்டிருக்கும் அச்சம் என்னும் உணர்ச்சி வேகம், ஒரு பக்குவப்பட்ட மனிதனிடத்தில் நல்ல கட்டுப்பாட்டில் இருப்பதால் இது நலமார்ந்த அச்சம் எனப்படும்.

## அச்சநோய்

மனிதன் அச்சப்படுவது வாழ்வில் இயற்கை, ஆனால், அச்சநோய்க்கு ஆளானவரோ அபாயம் ஏதுமற்ற சூழ்நிலையிலும் அளவுக்குமீறிய இயல்புகளுக்குப் புறம்பான அளவில் அச்சம் கொள்கிறார். நோயாளியின் கல்வி அறிவிற்கும் வாழ்க்கைத் தரத்திற்கும் இப்பயனமானது சற்றும் பொருத்தமற்றதாக இருக்கும். அளவிற்கதிகமான பயம் மனத்திலே தோன்றுவதற்கான காரணத்தை சிலரால் விளக்கிக் கூற முடியாது.

திறந்த வெளி, உயரமான இடம், அறைக்குள் தனித்திருத்தல், இரத்தம், மிருகங்கள், இருட்டு, தண்ணீர், நோய், போன்றவற்றில் ஏற்படும் பயம் அச்ச நோயின் சில வகைகளாகும். டாக்டர் பிராய்ட் இத்தகைய அச்சம் வருவதற்குக் காரணம் குறியின்பப் பருவ வளர்ச்சித் தடை எனக் கூறுகிறார்.

## முத்தொள்ளாயித்தில் அச்சம்

முத்தொள்ளாயிரத்தில் இடம் பெற்றுள்ள

**“அள்ளல் பழனத் தரக்காம்பல் வாய் அவிழ**
**வெள்ளந்தீப் பட்டதோ வெரீஇப் புள்ளினம்தம்**
**கைச்சிறகாற் பார்ப்பொடுக்கும்” (பாடல் 14)**

எனும் பாடலில்

சேற்று வயல்களில் வெள்ளம் தீப்பட்டதோ? என அஞ்சிய பறவைக் கூட்டங்கள் தம்கைகளாகிய சிறகுகளால் தம்குஞ்சுகளை ஒடுக்கும் என அச்சமானது அ்.றிணை உயிர்களான பறவைகள் வாயிலாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

முத்தொள்ளாயிரத்தின் 40வது பாடலின் இறுதி அடியில்

**“............. கடுமான் தேர்க் கிள்ளி**
**அளியிடை அற்றம் பார்ப்பாய்” (பாடல் 40)**

என முடிகிறது. இதில் அற்றம் என்பதன் பொருள், அச்சம், சோர்வு, மெலிவு எனப் பலபொருள் தரும் ஒரு சொல்லாக அமைந்திருப்பதனைக் காணமுடிகிறது.

இதனை, ‘‘சோழனுக்கும் எனக்குமான, அன்பு நெஞ்சங்களுக்கிடையில் அச்சத்தை சோர்வை மெலிவை உண்டாக்கப் பார்க்கிறாய்’’ எனப் பொருள் கொள்ளலாம். மற்றொரு பாடலில் சோழன் நலங்கிள்ளியின் கையமர்ந்த நெடியவேல் அச்சம் தருவதாகும் எனும் பொருளில்

**“நாம நெடுவேல் நலங்கிள்ளி” (பாடல் 41)**

எனும் தொடரில் பாடல் தொடங்குகிறது. இங்கு நாமம் என்பதன் பொருள் அச்சம் என்பதாகும்.

## இறைமை அச்சம்

சேரன் மீது காதல் கொண்ட தலைவியின் உளம் அறியாத அவளது தாய் வெறியாட்டு அயர்வதற்கு வெள்ளாட்டு இரத்தத்தைத் தூவி தலைவிக்குப் பிடித்த நோய் நீங்க வேண்டுவது இறைமை அச்சமாகும். இரத்தம் பெண்மையின் குறியீடாகும்.

## சினம்

சேரன் பெரிய யானைப்படையை உடையவன் அவனது கண்களைச் சினமுறச் செய்து சிவப்படைய வைத்த பகைமன்னர்களின் நாடுகள் எரிக்கப்பட்டன. கடுமுள்ளி எனும் நச்சு மரம் பரவி, தீயும் பரவின. இதனை, **“செங்கண் சிவப்பித்ததார் நாடு” (பாடல் 20)** என்கிறது.

மற்றொரு பாடலில் “சேரனின் இலை வடிவ வேலைப் பழித்துச் சினம் ஊட்டியவர்கள் நாடுகள் மிகுந்த அழிவுக்கு ஆகின” எனவும் கூறப்பட்டுள்ளது.

## சோர்வு மனப்பான்மை (Melancholy)

சோர்வு, எதிலும் சோர்வையும், எல்லாவற்றையும் எதிர்மறையாகவும் உணர்தல், சோகமாகக் காட்சியளிப்பது தத்துவவார்த்தங்களில் ஈடுபாடுகாட்டுவது இதன் தன்மை ஆகும்.

## சோர்வு வகை

சோர்வு என்பது மகிழ்ச்சியற்ற நிலை, மூடிய நிலை, துயரம் உள்ள நிலை, சோர்வுள்ள மனநிலை என்பது, வெளிக்காரணம் ஒன்றினால் தனக்கு அன்பான ஒருவர் மரணமடைவது போன்ற காரணத்தால் ஏற்படுவது உண்டு. இது உடல்நோய் உள்ளவர்களுக்குக் குறிப்பாக நீண்டகால நோய் உள்ளவர்களுக்கு அல்லது ஊனமுற்றவர்களுக்கு ஏற்படுவது உண்டு.

பலவகையான மனநோய்களின்போது சோர்வுநிலை ஏற்படுவது இயல்பு. இதற்குக் காரணம் பெரும்பாலும் அடக்கிக்கொள்ளப்பட்ட கோபம், குழந்தையாக இருந்தபொழுது தன் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத பொழுது எண்ணச் சிதைவு அடிக்கடி ஏற்பட்டிருக்கலாம். எனினும், அவர்கள் தன் கோபத்தைக் காட்டத் துணிச்சல் இருந்திருக்காது. அதுவே பின்னர் சோர்வு வகையாக மாற்றிருக்கலாம்.

## கவலை

கவலை என்பது மகிழ்வற்ற உணர்ச்சி வேகம், இந்த உணர்வு நம் முகத்தில் தெரியாது. கண்களும் வாயும் ஓரங்களில் கீழே இறங்கிக் காணப்படும். குரலில் ஓர் அதிர்வு அல்லது இடைவெளி உண்டாகும். நமக்குத் தெரிந்து ஒருவர் இறந்த செய்தி கேட்டால் வரும் கவலை போன்றதென்றால் சிறிது நேரம் கண்ணீர் வழியவிட வேண்டும். அப்போது உணர்ச்சி வேகம் நீங்கும். கண்ணீரை, இது போன்ற நேரங்களில் அடக்கி வைத்திருப்பது பிரச்சினைகளுக்கு வழி வகுத்துவிடும்.

## கவலை வகை

நினைவு மனம் நினைவு நிலைக்கு முற்பட்ட மனம் அல்லது நினைவற்ற மனம் கொண்டு உணரப்படும் நினைவு உணர்ச்சியில் தமக்கு என்ன நேரிடுமோ என்ற பயமும் பீதியும் கொண்ட உணர்ச்சி இருக்கும். உடலில் கூட எதிர்வினைகள் காணப்படும். அவை வேகமாக மூச்சுவிடுதல், மிகுதியான இதயத் துடிப்புக் கோளாறு மற்றும் உண்ணும் ஆர்வம் இல்லாமை இவற்றுடன் வாந்தி, வயிற்றுப் போக்கு அடிக்கடி சிறுநீர் போதல் ஆகியவை ஏற்படலாம். சிலர் மிகவும் பரபரப்பும் கொந்தளிப்பும் கொண்டு, தசைகள் விரைத்து நடுங்கியும் காணப்படுவர். சிலர் எதற்கும் பதில் சொல்லாமல், அசையாமல் இருப்பர். இவர்கள் எதற்கும் முடிவெடுக்க முடியாதவர்கள்.

கவலையுள்ளவன், துன்பம் வரும்போது அதை எதிர்கொள்ளத் தனக்கு ஆற்றல் இல்லை என்ற எண்ணம் கொண்டிருப்பான். அந்தத் துன்பங்களேகூட தாமாகக் கற்பனை செய்து கொண்ட பொய்யானவை ஆகும்.

## கவலை: நரம்புச்சிக்கல் கோளாறு

கவலை என்பது மற்ற மனநோய்களில் காணப்படும் என்றாலும் இந்த வகைக் கோளாறில் கவலை என்பது மிகுதியாக இருக்கும். கவலை என்பது கடுமையாகவோ அல்லது நாட்பட்டதாகவோ இருக்கலாம். இவற்றிற்குக் காரணம், வளர் இளம் பருவத்தில் தோன்றிய பாதுகாப்பற்ற தன்மை, அவ்வப்போது நேரிட்ட நெருக்கடி நிலைகளால் மோசமாகி விட்டிருப்பதுதான்.

முத்தொள்ளாயிரத்தில், தலைவியின் மனத்தில் ஏற்பட்ட காதல் நோயினால் தலைவி மெலிகிறாள். தலைவிக்கு யாதுகுறையும் இல்லை. காதல் நோயைத்தவிர அதைப் பிறரிடம் சொல்லித்தானே ஆகவேண்டும். கவலைப்படுவோரின் கவலை நிலையினையும் அக்கவலைக்கான காரணத்தையும் யாரால் நேர்ந்ததோ அவரிடம் அக்கவலையைப் போக்குதல் உயர்ந்த மக்களின் இயல்பு. ஆதலின் சேர மன்னனிடமே எடுத்துக்கூறலாம் எனத் தலைவி எண்ணுதல் உலக இயல்பு. இதனை

**"சொல்லவே வேண்டும் நமகுறை**

**............................................................**

**உலகம் கிடந்த இயல்பு" (பாடல் 12)** எனும் பாடல் கூறுகிறது.

பெண்களுக்கான பண்புகளுள் ஒன்று நாணம். தலைவியின் நாணம் ஒரு பக்கம் இழுக்கிறது. சோழன் அழகோ உள்ளத்தை நெகிழச் செய்கிறது. கண்களைக் கலங்கவும் செய்கிறது. யாமத்தில் இருபக்கமும் எரியும் மூங்கில் குழாயினுள் எறும்பு துன்புறுதல் போல் என நெஞ்சம் சுழலுகிறது.

**"இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பு போலத்**

**திரிதரும் பேருமென் நெஞ்சு" (பாடல் 29)** எனும் பாடல் வழி அறியலாம்.

சோழன் குறித்த பாடலொன்றில் தலைவிக்கு வருத்தம் ஏற்படுகிறது. சோழ மன்னனைக் கனவில் காணமுடியாதபடி கண்கள் உறக்கத்தால் மூடிக் கொள்கின்றன. நனவில் காணமுடியாதபடி நாணம் அவளை முன்சென்று விளக்குகிறது. ஆதலின் தலைவிக்குத் துயரம் ஏற்படுகிறது.

பெண்களுக்கு மட்டுமல்ல நாணம் அஃறிணை உயிராகிய யானைக்கும் தோன்றியது என்பதனை

**"கொடிமதில் பாய்ந்திற்ற கோடும் அரசர்**

**முடியிடறித் தேய்ந்த நகமும் - பிடிமுன்பு**

**பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே**

**கல்லார் தோட் கிள்ளி களிறு" (பாடல் 45)**

கிள்ளியினுடைய நாட்டில் தலைவிக்கு மட்டுமல்ல மக்களும், விலங்குகளும் நாணம் கொண்டு விளங்கின எனக் கூறுவதன் சிறப்பை அறியலாம்.

## இல் பொருட்காட்சி

திரிபுக்காட்சி, இல்பொருட்காட்சி பிரச்சினைகள் புலன் காட்சியின் அகக்காரணிகளுக்கும் புறக்காரணிகளுக்கும் இடையே ஏற்படும் இடைவினைகளாகத் தோன்றுகின்றன. உண்மைப்புலன் காட்சி என்பது இயற்பியல் தூண்டலுடன் இணைந்த இணக்கமான ஒன்றாகும். தவறான புலன்காட்சி என்பது தனியவனின் நினைவினால் தீர்மானிக்கப்படும் ஒன்றாகும். ஒன்றினை வேறொன்றெனக் கொள்வது தவறான புலன்காட்சி. இல்பொருட்காட்சி என்பது வேறொரு வகையான புலன்காட்சியாகும். இதில் உண்மையில் ஒன்றுமில்லாத போதும் ஒருவன் சிலவற்றைக் காணவும், கேட்கவும் செய்கிறான். இது ஓர் பிறழ்நிலை அறிகுறியாகும். இது போன்ற சாதாரணமான இல்பொருட்காட்சி அனுபவங்களை மக்கள் அன்றாட வாழ்வில் அடைகின்றனர்.

சிலவேளைகளில் நாம் ஏதோ ஒன்று நம் தோலின்மீது குறுக்காக ஊர்வதுபோல உணர்வோம். ஆனால் அப்போது உண்மையில் எதுவுமிருக்காது. யாரோ கூப்பிடுகிறார் என்று பதில் தருவோம்.

ஆனால் எவரும் நம்மைக் கூப்பிட்டிருக்க மாட்டார்கள். இவையெல்லாம் ஒரு வகை வினோதமான தவறான புலன்காட்சிகள். இவை புறவயமான உண்மை நிலையைச் சுட்டி நிற்பன அல்ல. எனவே, திரிபுக்காட்சிகளும் இல்பொருட்காட்சிகளும் உயிரியின் ஒரு சில உடலியல், உளவியல் சார்ந்த நிலைகள் என்று கொள்ளலாம்.

## உருவெளித்தோற்றம்

உள்ளத்தில் ஏற்பட்ட இறுக்கத்தைக் குறைக்கப் பல வழிகள் உள்ளன. அவற்றுள் ஏதேனும் ஒரு வழியை உள்ளம் கண்டு கொண்டால் ஏற்றுக் கொள்கிறது. பின்னர் உள்ளுணர்ச்சிக்கு இறுக்கம் ஏற்படுகின்றபோது முன்னர் ஏற்பட்ட நிறைவை அனுபவமாகக் கொண்டு உள்ளம் செயல்படுகிறது. இவ்வகையான செயற்பாடுகளின்போது கிட்டாத போது, உருவெளித் தோற்றத்தின்போது வழியே நினைத்துப் பார்க்கிறது.

முத்தொள்ளாயிரத்தில், சோழநாட்டு உழவர்கள் நெற்களத்தில் வைக்கோற் போரில், ஏறிநின்று ''நாவலோ ஓ'' என்று அழைக்கும் ஓசையானது நலங்கிள்ளி தம்பகைவரைக் கொல்ல யானையின் மீது அமர்ந்து யமன் கூவி அழைப்பதைப் போலக் கூவினான் என்கிறது.

**"..............................காவலன் தன்**

**கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தாற் போலுமே" (பாடல் 43)**

எனும் பாடலடிகளின் வழி இதனை அறியலாம்.

மற்றொரு பாடலில்,

**"சோழனின் உறையூர் நகரில் பூமாலை விற்பதனால் பலவண்ண மலர்கள் மாறிக்கிடக்கின்றன மிகுதியான காலை நேர வானவில் போலத் தோன்றியது" (பாடல் 44)** எனும் பொருள் வருகிறது. இது உவமையேயாயினும், தலைவியின் காதல் மீதுச் சோழனின் தலைநகர்த் தெருவில் வானவில்லைக் கண்டது போலவாம்.

**"கண்ணும் கொளச்செறி நெஞ்சே என்னை இவை**

**தின்னும் அவர் காண லுற்று"** எனும் திருக்குறளை இங்கு இணைத்தறியலாம்.

தலைவியின் நெஞ்சமானது தம் கைகளையே போர்வையாகப் பொத்திக் கொண்டு ஒரு பனிநிலவும் மாதத்தில் சேரவேந்தனைக் காண அவனது கடைவாயிலில் நின்றது. இது உவமை அணியாகும். இப்பாடலில் நெஞ்சம் தோழியாக உவமிக்கப்படுகிறது. ஆனால் உளவியல் நோக்கில் இல்லாத ஒரு பொருளை இருப்பதாகக் காண்பது இல்பொருள்

**"கடும்பனித் திங்கள் தன் கைபோர்வையாக**

**நெடுங்கடை நின்றது சொல் தோழி நெடுஞ்சினவேல்**

**ஆய்மணிப் பைம்பூண் அலகுதார்க் கோதையை**

**காணிய சென்றவென் நெஞ்சு" (பாடல் 7)**

கைபோர்வை - கையையே போர்வையாக என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை.

## காட்டி மேகம்

காட்டி மோகம் என்பது தன் உடலையும் பாலியல் உறுப்புகளையும் காட்சிப் பொருட்களாக் காட்டும் மனோபாவம். அழகு குறித்த கற்பனை பொதுவாக பெண்ணுடலுடன் தொடர்புகொண்டிருக்கிறது. இது பெண்களுக்குத் தங்களின் உடல் உறுப்புகளைப் பிறருக்குக் காண்பிக்கும் மனோபாவம் ஆகும். பல பெண்களுக்கும் எழுச்சி நிலையிலிருக்கும் ஆணின் உடலைக் காண்பதில் ஆர்வமிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது பாலியல் மகிழ்ச்சியைத் தருகிறது.

ஆடையை நிர்வாணத்தின் இன்னொரு வடிவம் என்று கூறுவர் பிராய்ட் . மேலும் அனைத்து ஒப்பனைப் பொருட்களும் காட்டி மோகத்திற்குரியன. ஆடைகளை அதிகம் நேசித்தல், வாசனைப் பொருட்களைப் பயன்படுத்தல், தொப்புள் தெரியப் புடவைக் கட்டுதல், புடவைத் தலைப்பைக் காட்டுதல், பெரிய பொட்டு, மிகைநகை அணிதல், உதட்டுச் சாயம் போன்றன காட்டி மோகத்தில் குறிப்பிடத்தக்கவை. ஆண்கள் டை, குல்லா அணிதல் மதக்குறிகளை அணிதல் காட்டி மோகத்தின் திரிபுருவாக்கமாகும்.

முத்தொள்ளாயிரத்தில் தலைவியானவள் தம்கைகள் மார்பு உடல் ஆகிய தம் அங்கங்களில் அணிந்திருக்கும் அணிகலன்கள் மற்றும் சந்தனம் ஆகியவை பாண்டிய நாட்டில் கிடைத்தவை. இவ்வாறாகத் தம் அழகிற்கு அணிகலன்களால் மேலும் அழகூட்டுதல் காட்டிமேகம் எனும் வகையைச் சார்ந்ததாகும்.

மற்றொரு பாடலில் பாண்டியனது குளிர்ந்த சந்தனம் பூசப்பெற்ற மார்பு எடுத்துரைக்கப்படுகிறது. இது காட்டிமோகமாக இருப்பதனால் தான் தலைவி அவனது மார்பினைத் தழுவ எண்ணுகிறாள். இதனை ,

**"குருதிவேல் மாறன் குளிர்சார்ந்து அகலம்**

**கருதியார் கண்ணும் படும்"** (பாடல் 68) எனும் பாடலால் அறியலாம் .

பிறிதோர் பாடலில் பாண்டியனுடைய மார்பினை வணங்குவதற்கு அழகிய கதவினைச் சிறிது திறந்து மெல்ல நடக்கமாட்டோயோ எனக் குதிரைகளை வினவுவதான பாடல் இது.

**"களியானை மாறன் தன் மார்பம்**

**கதவங் கொண்டியாடும் தொர்" (பாடல் 74)**

இப்பாடலில் குதிரையானது பெண்ணின் குறியீடு ஆகும்.

## பார்வை மோகம்

தலைவியின் கண்கள் சோழமன்னனைக் கண்டன. இதனை மையுண்ட கண்கள் கண்டன என்கிறார் புலவர்.

**"தண்ணார மார்பிற் தமிழ்நர் பெருமானை**

**கண்ணாரக் காணக் கதவு" (பாடல் 44)**

**"சுடரிலை வேற் சோழன்" (பாடல் 26)**

**"அலருதார்ச் செம்பியன் ஆடெழில் தோள்" (பாடல் 28)**

**"காமருதோட் கிள்ளிக் கென் கண்வற்ற" (பாடல் 29)**

**"……………………பாய்புனல் நீர்நாட்டுச்**

**காளையை" (பாடல் 30)**

**"தெண்ணீர் நறுமலர்த்தார்ச் சென்னி இளவளவின்" (பாடல் 35)**

எனவரும் பல பாடல்களில் சோழன் குறித்த அழகினைத் தலைவியது கண்கள் களிப்புற்று மயங்குதால் பார்வை மோகம் இடம்பெற்றுள்ளதனை அறியலாம்.

முத்தொள்ளாயிரத்தின் பாண்டியன் குறித்த பாடல் ஒன்றில் பார்வை மோகம் இடம் பெற்றுள்ளதனைக் காணலாம்.

'நீண்ட தோள், வாட் கணாய்' எனும் தொடர்கள் நீண்ட அழகிய கண்கள் , ஒளி பொருந்திய கண்கள் என அங்கங்களை குறித்துக் கூறி,

**"மண் கொண்ட தானை மறங்கனல்வேல் மாறனைக்**

**கண்கொண்டு நோக்கல் என்பாள்" (பாடல் 54)**

என்பதால் பார்வை மோகம் எனப்படும் நோக்கு மோகத்தின் தன்மையினை அறியலாம்.

## சார்பொருள் மோகம் (Fetishism)

ஆவி நம்பிக்கை, சார்பொருள் மோக வெளிப்பாடு ஆகும். நேர்த்திக் கடன்களுக்கான பொருள்கள் போலிப்பொருள் வழிபாடு போன்றன சார்பொருள் மோகம் ஆகும்.

முத்தொள்ளாயிரத்தில் பாண்டியன் மன்னனின் குதிரை கனவட்டம் குறித்துக் கூறப்படுகிறது. அது கால்களால் குடைந்த புழுதியை மகிழ்வுடன் எடுத்து ஆடுவோமா? உடலில் அதனைச் சூடிக்கொள்வோமா? நீரில் நெகிழுமாறு அந்நீற்றைக் கலந்து கொண்டு மலரை எழுதுகோளாகக் கொண்டு எழுதுவோமா? என்பதான,

**"ஆடுகோ சூடுகோ ஐதாக் கலந்துகொண்டு**
**ஏடுகோடாக எழுதுகோ நீடு**
**புனவட்டம் பூந்தெரியல் பொற்றேர் வழுதி**
**கனவட்டம் கால்குடைந்த நீறு"** **(பாடல் 75)**

எனும் பாடலில் தாம் விரும்பும் ஒருவர் குறித்த பொருளைக் கொண்டு மகிழ்வது சார்பொருள் மோகம். இப்பாடலில் எழுந்த புழுதி, சார்பொருளாகிறது. அதனை எடுத்த தலைவியின் மகிழ்வான மனநிலையை மேற்கண்ட பாடல் எடுத்துரைக்கிறது.

## குடி

மருந்துக்கு அல்லது மதுவுக்கு அடிமை ஆதல் என்பது, ஒருவர் தனது சொந்த வாழ்க்கையில் திருப்தி அல்லது தன்மதிப்புப் பெற இயலவில்லை என்பதைக் காட்டும். இவர் அடிமையாதலின் கடுமையான விளைவுகளைப் பற்றி அவர் அறியாதவர். இப்படி அடிமையானவரின் நடத்தை மாற்றத்தால் துன்பப்படுவர், அவரது நெருங்கிய உறவினர்கள்.

குடிகாரர்கள், இரைச்சலாகப் பேசுதுடன் தான் மிகவும் சக்தி வாய்ந்தவன் என்றும் தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்றும் சொல்லுவார்கள். உண்மையில் எல்லாவிதமான திறமைகளும் அப்போது குறைந்தே இருக்கும். உல்லாசமான ஒரு நிலையில் இருந்து சிறிது சிறிதாக எரிச்சல் உணர்வும், தற்பெருமை நிறைந்த திமிரான மனப்போக்கும், அடக்கம் குறைந்த ஆரவாரமும், கூச்சமின்மையும் ஏற்படுகின்றன. சமூகத்திற்கும் சுற்றுப்புறச் சூழ்நிலைகளுக்கும் இடைஞ்சலாகக் குடிகாரன் அமைகிறான் என்பார் உளவியலாளர்கள்.

மது அருந்துதல் ஒருவகை மோகம். சேரனது வஞ்சிமாநகரில் கள்ளுண்போர் கள்குடியர்களுக்குக் கள்ளை நீட்ட தங்கள் கைகளால் குடியர்கள் கலயத்திலிருந்து நுரை முதலியவற்றை வழித்தெறிய அவை மண்ணில் கலந்தமையால் அவ்விடத்தை யானைகள் மிதிப்பதனால் அவ்விடம் சேறானது.
இதனை,

**"களிகள் களிகட்கு நீட்டதம் கையால்**
**களிகள் விதிர்த்திட்ட வெங்கள்"** **(பாடல் 15)**

எனும் அடிகளால் அறியலாம்.

## கனவுகள்

இருபதாம் நூற்றாண்டில் தொடக்கத்தில் சிக்மண்ட் பி.்ராய்டு தன்னுடைய சிறந்த ஆய்வு நூலான கனவுகளின் விளக்கம் என்ற நூலை வெளியிடும் வரையில் கனவுகள் புதிரான பொருள்களைக் கொண்டிருப்பதாகவே கருதப்பட்டு வந்தன. மனிதன் தன் தூக்கத்தில் பெறுகின்ற ஒரு வகையான சொந்த அனுபவம் கனவுகள் ஆகும்.

அண்மை ஆராய்ச்சியின்படி குரங்குகள், நாய்கள், பூனைகள் போன்ற விலங்குகள் எளியவகையான கனவுகளில் ஈடுபடுகின்றன என அறியப்பட்டுள்ளன.

இது ஒரு முக்கியமான உள உயிரியல் சார்பான செயல் முறையாகும். கனவினை அழுத்தி ஒடுக்குதல் கடுமையான உள் இடையூறுகளுக்குக் காரணமாயமையலாம். செறிவு மிக்க கருத்துத்திரிபுநிலை, உளப்பிணி போன்ற உள நலமின்மையால் வருந்தும் நோயாளிகள் தங்கள் மொத்த உறக்க நேரத்தில் 59 சதவிகித நேரத்தைக் கனவு காண்பதில் செலவிடுகின்றனர் என உளவியல் அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர்.

## மேலார்ந்த பொருளடக்கம்

கனவில் நினைவுக்கு வரும் பகுதி மேலார்ந்த பொருளடக்கம் ஆகும். மேலார்ந்த பொருளடக்கம் முதல் நாள் எண்ணங்களிலிருந்த கருத்துக்களை எடுத்துக் கொண்டு இதனை பரிய எண்ணங்கள், மனவெழுச்சிகளுடன் சேர்த்துக் கொள்கிறது.

## உள்ளார்ந்த பொருளடக்கம்

கனவின் உண்மையான பொருள் தான் உள்ளார்ந்த பொருளடக்கம் என்று கூறப்படுகிறது. அது நேரடியாக வெளிப்படுத்தப்படுவதில்லை, ஆனால் மாறுபட்ட வடிவத்தில் சித்தரிக்கப்படுகிறது. தாமஸ் லேசாக் என்பவர் 'கனவும், பேதலிப்பும், நனவிலியின் செயற்பாடுகளால் ஏற்படுபவை' என்கிறார்.

உறக்கத்தில் கனவு காண்பது இயல்பான நிலையாகும். ஒருவரின் வாழ்வில் வரப்போகும் நன்மை தீமை பற்றி, உணர்த்தும் விதமாகவே மனிதர்களுக்குக் கனவுகள் அமைகின்றன.

## கனவுக்கான காரணங்கள்

குழந்தைப் பருவ பாலியற் தடைகள், ஏமாற்றங்கள், துண்டிப்புகள், அச்சுறுத்தல்கள், பதட்டங்கள் போன்ற ஊறு விளைவிக்கும் அனுபவங்கள் கனவுக் கட்டமைப்பிற்கான ஆதாரங்கள் ஆகும்.

கட்டபொம்மனின் மரணமும் ஜுலியஸ் சீசரின் முடிவும் கனவுகளால் முன்கூட்டி அறிவிக்கப்பட்டுள்ளன என்பர் அறிஞர். கனவு வெளிப்பாடுகளை நிகழ்காலத்தோடு தொடர்புடைய இறந்தகால அனுபவங்களின் மறுபதிப்பாகப் பிராய்ட் காண்கிறார்.

முத்தொள்ளாயிரத்தில் கனவு பல நிலைகளில் பேசப்படுகிறது.

**"கங்குல் ஒரு நாள் கனவில் தைவந்தான்" (பாடல் 6)**

என்று சேரன் கனவினுள் வந்து தம் உடம்பைத் தழுவிய செயல் கூறப்பட்டுள்ளது. இதனைப் பெண்டிர் எவ்வாறு அறிந்தார் எனத் தலைவி வியத்தலால் கனவினுள் இன்னவாறு நிகழ்ந்தவை என்னை என்பதனை ஊகித்தறியலாம்.

சோழன் குறித்த பகுதியில் சோழ மன்னனைக் கனவில் காணுகிறாள் தலைவி . கனவில் ஊடல் தோன்றி அது நீடிப்பதால் அவனுடன் புணர்வதலை இழக்கிறாள் தலைவி. இங்கு கனவு எனும் தொடர் இடம் பெறவில்லை. மாறாக,

**"காளையைக் கண் படையுட் பெற்று" (பாடல் 30)**

என வரும் தொடரில் கண்படை எனும் சொல் உறக்கம் ஆகும். உறக்கத்தில் பெறுவது கனவே என்பது தருவிக்கப் பெறுகிறது. மற்றொரு பாடலில்

**கனவினுள் காண்கொடா கண்ணும் (பாடல் 32)**

எனும் தொடர் கனவின் சிறப்பை விளக்கி நிற்கும்.

முத்தொள்ளாயிரத்தின் பாண்டியன் குறித்த பாடல்கள் பலவற்றில் கனவுகள் குறித்த செய்திகள் பல இடம் பெற்றுள்ளன. களிப்புற்ற யானையைக் கொண்ட பாண்டிய மன்னன் என் கனவில் வந்து அன்பு செய்தான். உறக்கத்திலிருந்து தெளியாமல் செங்காந்தள் போன்ற என் மெல்லிய விரல்களால் அவன் கிடந்த படுக்கையைத் தடவினேன். கனவு கலைந்து, என்னையனறி வேறொருவரையும் காணேன் என்கிறாள்.

**"களியானைத் தென்னன் கனவின் வந்தென்னை**

**அறியான் அளிப்பானே போன்றான் தெளியாதே**

**செங்காந்தள் மென்விரலால் சேக்கை தடவந்தேன்**

**என் காண்பேன் என் அலால் யான்: (பாடல் 61)**

எனக் கனவினை உரைக்கிறாள். செங்காந்தள் பெண்மையின் குறியீடு, இதனையடுத்த பாடலில்,

**"கனவை நனவென்று எதிர்விழிக்கும்" (பாடல் 62)** எனும் தொடர் வருகிறது. மனம் கனவை நனவென்று கருதுகிறது. இதே பொருளில் நனவில் வராத தலைவன் கையைப் பற்றினான் என்கிறது.

**கூரார் வேல் மாறன் என்கைப்பற்ற**

**வாரா நனவென்றெழுந்திருந்தேன் நல்வினை ஒன்றில்லேன்**

**கனவும் இழந்திருந்தவாறு (பாடல் 64)**

## குறியீடு

உள்ளார்ந்து விளங்கும் தன்மையில் குறியீடு என்பது உளவியலில் ஒன்றாக உள்ளது. இது முத்தொள்ளாயிரத்தில் இடம் பெற்றுள்ளது. இளநீர் கொண்ட தென்னை மரங்கள் ஞாழல் என்னும் குங்கும் மலர்கள் மரங்கள் நிலைத்து மலர்கின்ற நாடன் சேரன் என்பதால் சேரனது தோற்றப் பொலிவில் பெண்கள் சூழ இருந்தனர் என்பது குறியீடாக அறியப் பெறுகிறது. குங்குமம் எனும் வண்ணம் பெண்களைக் குறிப்பாக உணர்த்துவதாகும்.

சினம் கொண்ட சேரனின் கண்களின் சிவப்பு கடுமுள்ளி எனும் ஒருவகை நச்சு மரத்திற்குக் குறியீடானது.

இவ்வாறாக முத்தொள்ளாயிரத்தில் அகமரபுக் கூறுகளில், உளவியல் தன்மைகளான, காதல், காமம், அச்சம், மோகம், கனவு, குறியீடு போன்றன மிகுதியும் இடம் பெற்றுள்ளன என்பதனை அறிய முடிகிறது.